**செ.வெ.எண்: 19** **நாள்: 14.07.2020**

பெரம்பலூர் மாவட்டம்

**பெரம்பலூர் மாவட்டம் குரும்பலூரில் ரூ.88.70 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.**

**அதன் விபரம் பின் வருமாறு:**

பெரம்பலூர் மாவட்டம் குரும்பலூரில் ரூ.88.70 லட்சங்கள் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் இன்று (14.07.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

குரும்பலூர் பேரூராட்சியில் புதிதாக ரூ.88.70 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. இக் கட்டடம் கட்டும் பணிகளை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கட்டிடப் பணிகளை விரைந்து முடிக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

பெரம்பலூர் மாவட்டத்தில் குரும்பலூர் பேரூராட்சியில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையிலான பொது கட்டிடங்கள் ரூ.88.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. அதன்படி, இருளர் காலனியில் ரூ.2.70 லட்சம் மதிப்பீட்டில் மோட்டார் அமைப்புடன் கூடிய புதிய போர்வெல் கட்டிடமும், ரூ.8.10 லட்சம் மதிப்பீட்டில் ஆண்களுக்கான புதிய கழிப்பறைகளும், ரூ.8.10 லட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கான கழிப்பறைகளும், ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் 980 மீட்டர் நீளமுள்ள சாலைப்பணிகளும், ரூ.12.30 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் பாதையும், ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடமும், நிர்வாக மற்றும் சில்லரைச் செலவினம் ரூ.2.50 லட்சம் என மொத்தம் ரூ.88.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன் மூலமாக வரக்கூடிய காலங்களில் பொதுமக்களுக்கு சிரமம் இல்லாமல் அவர்களது தேவைகள் அலைச்சல் இல்லாமலும், அவர்களுக்கு செலவினம் ஏதும் ஏற்படாமல் இவ்விடத்திலேயே அவர்களது தேவைகளை சுலபமாக நிறைவேற்றிக்கொள்ளலாம்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வட்டாட்சியர் திரு.பாரதிவளவன், நிர்வாக அலுவலர்கள் திரு.தியாகராஜன், திரு.சதீஸ்குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**